## முதலாவது தேர்ச்சி : இறைத்திட்டத்தை விளங்கி அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர்

1

### 1.1. மீட்புத் திட்டத்தில் குல முதுவர்கள்



இறைவன் தன் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற பலரைத் தெரிந்தெடுத்தார். அவ்வரிசையிலே முதலில் குல முதுவரான ஆபிரகாமை அழைத்தார்.


ஆண்டவர் ஆபிராமை நோக்கி ''உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன்; உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன்; உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்'' என்றார். ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரோனைவிட்டுச் சென்ற பொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து. ஆபிராம் தன் மனைவி சாராயையும் தம் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரோனில் சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆண்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர்.

தொ.நூ.12:1-5



ஆபிராம்

→



ஈசாக்கு

→



யாக்கோபு

இறைவன் தனது மீட்புத் திட்டத்தை முன்னெடுப்பதற்காகக் குல முதுவர்களைத் தெரிந்தெடுத்தார்.

இறைவனின் அழைப்பிற்கு செவிமடுத்த ஆபிராம் இறை திட்டத்தை நிறைவேற்ற கானானில் குடியேறினார். இங்கே அவரது கீழ்ப்படிவு வெளிப்படுகின்றது.

மீட்பின் வரலாறு ஆபிராமுடன் ஆரம்பமாகின்றது. இதனைத் தொடக்க நூல் 12ம் அதிகாரத்தில் பார்க்கின்றோம்.

**விடையளிக்கவும்**

1. இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற தம்மை அர்ப்பணித்த குலமுதுவர்களைப் பெயரிடுக.
2. ஆபிரகாம் எவற்றை விட்டுப் புறப்பட்டார்?
3. ஆபிரகாம் பெற்றுக்கொண்ட மூன்று ஆசிகளைக் குறிப்பிடுக.

## ஈசாக்கு வழியாக மீட்பு

தனது வாக்குறுதியில் இறைவன் என்றும் பிரமாணிக்கமாயிருந்தார். நாடற்ற ஆபிரகாமுக்கு வாக்களித்த நாட்டை வழங்கினார். வயது முதிர்ந்த போதும் அவர் மனைவி சார பிள்ளை பெற முடியாத நிலையிலும் கூட தாம் வாக்களித்தபடி பிள்ளைச் செல்வத்தைக் கொடுத்தார்.

வாக்குறுதியின் பயனாகத் தாம் பெற்ற ஈசாக்கு எனும் ஒரே மகனைப் பேணி வளர்த்தார். அதே மகனைப் பலியிடுமாறு இறைவன் கேட்டபோது மறுப்பின்றிப் பலியிடத் துணிந்தார். இறைவனின் செயற்பாடுகளை ஆபிரகாம் தன் வாழ்வின் அனுபவங்கள் மூலம் உணர்ந்தார். அவரே விசுவாசத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

பின் அவர் அவ்விடத்திலிருந்து பெயேர்செபாவுக்குப் போனார். அன்றிரவு ஆண்டவர் அவருக்குத் தோன்றி; உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே, அஞ்சாதே ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன் உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்'' என்றார். எனவே ஈசாக்கு அங்கே ஒரு பலிப்பீடம் எழுப்பி, ஆண்டவரது திருப்பெயரைப்போற்றினார்; அங்கே கூடாரம் அடித்துத் தங்கினார். ஈசாக்கின் வேலைக்காரர் அங்கே ஒரு கிணறு வெட்டினார்.

தொ.நூ.26:23-25

ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கை ஈசாக்கு வழியாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

## யாக்கோபின் அழைப்பு

ஈசாக்கின் புதல்வர்கள் இருவரில் யாக்கோபை இறைவன் தமது மீட்புத் திட்டத்தை முன்னெடுப்பதற்காகத் தெரிந்தெடுத்தார்.

இஸ்ரயேல் எனப் பெயர் மாற்றம் பெற்ற யாக்கோபு மீட்புத் திட்டத்தின் பெரும் பங்காளியானார். யாக்கோபின் மூலமாக இஸ்ரயேல் இனம் விருத்தியடைந்து 12 கோத்திரங்கள் வழியாக இறைத்திட்டம் நிறைவேறுகின்றது. இவ்வாறு இறைவன் தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற தான் விரும்பி தெரிந்து கொண்டவர்களை வழிநடத்தி வருகின்றார்.

இறைவன் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் அளித்த வாக்குறுதிகளை யாக்கோபுக்கும் வழங்கினார்.

## யாக்கோபின் கனவு

யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து புறப்பட்டு, ஆரானை நோக்கிச் சென்றான். அவன் ஓரிடத்திற்கு வந்தபோது கதிரவன் மறைந்துவிட்டான். எனவே அங்கே இரவைக் கழிப்பதற்காக அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத் தலைக்கு வைத்துக்கொண்டு. அங்கேயே படுத்துறங்கினான். அப்பொழுது அவன் கண்ட கனவு இதுவே; நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக்கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர். ஆண்டவர் அதற்கு மேல் நின்று கொண்டு,

''உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே, நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவச் செய்வாய். உன்னிலும் உன்வழிமரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறுவன. நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச்செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றும் வரையும் உன்னைக் கைவிடமாட்டேன் என்றார்.

தொ.நூ.28:10-15

**குலமுதுவர்கள் இறைச்செயற்பாட்டை அனுபவித்த இடங்கள் :**

| | |
|---|---|
| ஆபிரகாம் | கெப்ரோன் |
| ஈசாக் | பெயர்செபா |
| யாக்கோபு | பெத்தேல் |

## செயற்பாடு

1. மேலே காட்டப்பட்ட குலமுதுவர்கள் மூவரின் அழைப்பிலிருந்தும் நான் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் ஐந்து எழுதுக.
2. இறைவன் தம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்றத் தெரிந்தெடுத்த யாக்கோபின் புதல்வர் பன்னிருவரின் பெயர்களை தொடக்க நூல் 35:23-26, 1 குறிப்பேடு 2:1-2 திருவிவிலியப் பகுதியிலிருந்து தேடி எழுதுக.
3. இறைவன் தமது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற என்னையும் அழைத்திருக்கிறார். என்னிடமிருந்து அவர் எதிர்பார்ப்பவை எவை என்பது பற்றிக் கலந்துரையாடுக.

**அனைவருக்கும் இறைவனின் இரக்கம்**

சகோதர சகோதரிகளே, நீங்கள் அறிவாளிகள் எனக் கருதாதவாறு மறைபொருள் ஒன்றை உங்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். அதாவது, பிற இனத்தார் முழுமையாக இறைவனிடம் வந்து சேரும் வரையில்தான் இஸ்ரயேலில் ஒரு பகுதியினர் மழுங்கிய உள்ளம் கொண்டிருப்பர். பின்னர் இஸ்ரேயல் இனம் முழுவதும் மீட்கப்படும்;

‘‘சீயோனிலிருந்து அவர் மீட்பராக வருவார்; யாக்கோபில் தீயதனைத்தையும் போக்கிடுவார். நான் அவர்களுடைய பாவங்களை அகற்றிவிடுவேன்; அவர்களுடன் நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே’’

என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா!

உரோ. 11:25-27

இவைனது மீட்புத் திட்டமும் அவரது இரக்கமும் அனைவருக்கும் சொந்தமானது என மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியிலிருந்து அறிகிறோம். இதன் அடிப்படையில் புதிய ஏற்பாட்டின் இறைமக்களாகிய கிறிஸ்தவர் எமக்கும் இப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

## செயற்பாடு

♦ பவுல் அடிகளார் உரோமருக்கு எழுதிய கடிதத்தின்படி (11:25-27) எமது வாழ்வில் நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய நான்கு படிப்பினைகளை எழுதுக.

1.

2.

3.

4.

**வாழ்க்கைக்கு**

கடவுள் தான் விரும்பியவர்களை மட்டும் அழைக்கின்றார். அவரது அழைப்பிற்கு நாம் கொடுக்கும் பதில் என்ன? அவரது அழைத்தலுக்கு பிரமாணிக்கமாய் வாழ்வதே எம் கடமை.